

## ஆசிரியர் மடல்

# இயேசுவே மெய்யான ஒளி

**அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு ,**

இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இறுதி மாதம். உறுதியுடன் வருடத்தை ஆரம்பித்தோம்.இறுதி வரை இருந்ததா என்றால் ஆம் என்று எல்லோராலும் சொல்லிவிட முடியாது.பல தத்தளிப்பு, சலசலப்பு, கொந்தளிப்பு, சலிப்பு, முறுமுறுப்பு இப்படி பல விதமான'பு'க்கள் நாம் கடந்து வந்த பாதையில் புகுந்ததால், அநேக வேளைகளில் நம் மன ரம்மியம் தொலைந்து,மகிழ்ச்சி மறைந்து போனது,இது இயல்புதானே!

**பிலிப்பியரில் பவுலால் சொல்ல முடிந்தது, என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.**

**" தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் ; வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும் ,பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.**

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு"** (பிலி 4 :11 - 13) என்று . அதே பவுல்தான் ரோமருக்கு எழுதும்போது, எப்படியெனில் நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை,நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன் (ரோமர் 7 :15) என்கிறார்.

புதுவருடம் ஒரு புதிய பெலனை நமக்குத் தரட்டும்.பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் என்ற வார்த்தையை உறுதியாய் பிடித்துக் கொள்வோம்.இனி வரும் நாட்கள் மிகவும் கொடியதாய் இருக்கப்போவதால் அவருடைய வருகையை மிகவும் விழிப்பாய் எதிர்நோக்கி பயத்துடனும், பரிசுத்தத்துடனும் காத்திருப்போம். விழிப்பாய் இருந்த ஐந்து கன்னிகைகள் மணவாளனை சந்திக்க முடிந்தது.அந்த ஐந்தின் ஆயத்தத்தை உற்றுக் கவனித்தவர்களாய் நாமும் மணவாளனை சந்திக்கக் கூடிய சபையாய் காணப்படுவோம்.பிறப்பின் மகிழ்ச்சியை அநேக சபைகளிலே காணமுடிகிறது. ஆனால் வருகையின் ஆயத்தத்தை பெருவாரியான சபைகளிலே காணமுடிவதில்லை. அநேக சபைகளுக்கு இப்படிப்பட்ட ஒரு வருகை உண்டு.மணவாட்டிகளை (சபையை )எடுத்துச் செல்ல மணவாளன் மத்திய ஆகாயத்திலே வரப்போகிறார் என்பது கூட தெரியாத நிலையில்தான் இருக்கிறது. 1 கொரிந்தியர் 15ம் அதிகாரம்,1 தெசலோனிக்கேயர் 4ம் அதிகாரம் படித்துப் பாருங்கள்.இயேசுவின் இரண்டாம் வருகையை அல்ல, அதற்கு முன்பாக இருக்கும் இரகசிய வருகையைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது.

மீட்பிற்காக பிறந்த மீட்பரின் வருகை சீக்கிரம் இருக்கிறது.சபைகளே ஆயத்தப்படுங்கள்.மீட்கப்பட்ட சபையாக மட்டுமல்ல..ஜெயம் கொண்ட சபையை எடுத்துக் கொள்ளவே இயேசு வருகிறார்.

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பட்டி மன்றம் 'மெய்யான ஒளி' யில்நடைபெற்று வருகிறது. பயன் தருவதாகவும்,பயன்பெறுவதாகவும் இருக்கிறது.

**நெகேமியா**(ஆலயப் பணி) இரண்டாம் கட்ட *(Second Stage)* பணிகள் ஆரம்பித்து நடந்து **கொண்டிருக்கிறது.** நின்று யோசித்தால் முற்றிலும் இயலாத காரியம்தான்.ஆரம்பித்து விட்டால் தேவன் யோசிக்க ஆரம்பிப்பார். இது பாரத்தை சுமக்கும் காலம் .அழிந்துபோகும் ஆத்துமாக்களை சுமக்கும் காலம்.இரக்கத்தை சுமக்கும் காலம் . நீதியை சுமக்கும் காலம் . கர்த்தருக்காக இழப்பை சுமக்கும் காலம். சுமப்போமா? ஆலயத்தின் பாரத்தை சுமக்க முன் வாருங்கள்.அது நம்மை பரத்திற்கு சுமந்து செல்லும்.

**"உங்கள் தேவனாகிய கர்த்தர், சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங்கள் கடந்து தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப் போகப் பண்ணினது போல, உங்கள் தேவனாகிய கர்த்தர் யோர்தானின் தண்ணீருக்கும் செய்து, அதை உங்களுக்கு முன்பாக நீங்கள் கடந்து தீருமளவும் வற்றிப் போகப் பண்ணினார் என்று அறிவிக்கக் கடவீர்கள்"**(யோசுவா 4 : 24). சிவந்த சமுத்திரத்தின் தேவன்தான் யோர்தானுக்கும் தேவனாயிருந்தார்.அதுபோல நெகேமியாவின் முதல் கட்டத்திற்கு *(First Stage)* தேவன்தான் எங்களுடைய இரண்டாம் கட்டத்திற்கும் *(Second Stage)* தேவனாயிருப்பார் என்ற விசுவாசத்தோடு ஆரம்பிக்கிறோம்.

எங்கள் மெய்யான ஒளி குடும்பத்திலே ஒரு குடும்பத்திற்கு ரூ .10,000 /= என்று நியமித்திருக்கிறோம் . கொடுத்து வருகிறார்கள்.தங்கள் திராணிக்கு மேலேயும் சிலர் கொடுக்கிறார்கள். இந்த குடும்பத்திலே இணைந்து கொள்ள இருகரம் நீட்டி உங்களையும் அழைக்கிறோம்.அநேகர் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே பணிகளை முடித்து விடலாம் .இந்த பூமியிலே நம்முடைய பயணம் முடியும் முன்பாக அநீதியான உலகப்பொருளால் நமக்கு சிநேகிதரை சம்பாதித்துக் கொள்ளுவோம், **நாம் மாளும்போது நம்மை நித்தியமான வீடுகளிலே அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்** (லூக்கா 16 : 9) ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஊக்கமாய் ஜெபிப்போம் .( மொத்த *Estimation* **70 முதல் 75 லட்சம் ஆகும்)** .

**கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்**
**பாஸ்டர் S. போஸ்கோ .**

**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**

**& 9283443230 (True Light Ministries)**
**Bank Transfer :**
**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**
**Our Website : www.truelightministry.org**

***17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .***




**“உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி** ”(யோவான் 1 : 9).

இந்த செய்தியிலே ஒளி தரும் பிரகாசிக்கிற,நிலையான நட்சத்திற்ரரமாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பை ஒட்டியுள்ள சில காரியங்களை தியானித்துப் பார்ப்போம்.

நட்சத்திரங்களின் எண்ணிக்கை பல கோடிஅதன் எண்ணிக்கையும் பெயர்களும் கர்த்தருடைய கரத்திலே உண்டு (சங் 147 : 4). அதிக ஒளி தரும் அல்லது அதிகமாய் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் உண்டு. இங்கே வேதம் குறிப்பிடும் சில நட்சத்திரங்களை இந்த செய்தியில் தியானிப்பது நலமாயிருக்கும் என்று நம்புகிறேன்

## 1.இரவை ஆளும் நட்சத்திரம்

இந்த உலகம் ஒரு அந்தகாரஇருளில் இருக்கிறது.இந்த உலகத்தின் அதிபதி பிசாசு.(யோ14 : 30).தேவன் ஒளியாயிருக்கிறார் (1யோ 1 :5).ஒளியின் பிள்ளைகளாகத் தான் தேவன் நம்மை காண விரும்புகிறார். யோவான்12:36 சொல்லுகிறது, ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார்.இந்த உலகின் இருளை அகற்றும் நட்சத்திரங்களாக தேவன் நம்மை காண விரும்புகிறார்.இந்த கிறிஸ்மஸ் நாட்களில் மட்டுமல்ல,எப்போதுமே நாம் இருள் நீக்கும் ஒளியாக, நட்சத்திரங்களாக, உலா வர வேண்டும்.இருளை ஆளுகை செய்ய வேண்டும். பேதுரு தன் நிருபத்திலே சொல்லும் போது நீங்களோ, “**உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும்,அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்**” (1பேதுரு 2 : 9).

கிறிஸ்து பிறப்பை உலகம் கொண்டாடுகிற வேளையிலே நாம் இப்படிப்பட்ட நட்சத்திரங்களாய் இருக்கிறோமா என்று ஒருவிசை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.இந்த கடைசி நாட்களில் உலகத்தின் அதிபதியாகிய பிசாசு பலவிதங்களிலே ஜனங்களை வஞ்சித்துக் கொண்டிருக்கிறான்.

ஜனங்களோ! அறியாமையினாலே சங்காரமாகிறார்கள். அங்கேயும் இங்கேயுமாக மலைகளிலும் மாட கோபுரங்களிலும் தீயை ஏற்றி இது தான் ஒளி என்கிறார்கள்.லட்சோப லட்ச ஜனங்கள்

**இந்த கிறிஸ்மஸ் நாட்களில் மட்டுமல்ல,எப்போதுமே நாம் இருள் நீக்கும் ஒளியாக, நட்சத்திரங்களாக, உலா வர வேண்டும்.இருளை ஆளுகை செய்ய வேண்டும்.**

தள்ளு முள்ளுலே ஏறி இறங்கி தீபத்தையும் விளக்குகளையும் தரிசித்துவிட்டு வீடு திரும்புகிறார்கள்.புனித பிரயாணத்திற்காக, புனித யாத்திரைக்காக வாங்கிய கடனுக்கு அடுத்தநாளே தண்டல்காரன் வீட்டுவாசலிலே வந்து நிற்கிறான். எத்தனை பரிதாபம்! எத்தனை வேதனை! யோவான் எழுதும்போது, **மேலும் நான் புதிய கற்பனைகளையும் உங்களுக்கு எழுதுகிறேன் இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது. ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது** (1 யோவான் 2 : 8).யார் இந்த மெய்யான ஒளி?அவர் பாவத்தையும் சாபத்தையும் முற்றிலுமாக நீக்கிப்போடுகிற இரட்சகர் இயேசுவே.

**வீடுகளிலும்,நாடுகளிலும் ஏற்றப்பட வேண்டியஒளி. பள்ளங்களையெல்லாம்நிரப்புகிற ஒப்பற்றஒளி. மலைகளையும் குன்றுகளையும் நொறுக்கி பதராக்குகிற அதிகார ஒளி மின்னலின் ஒளியை தம் கைக்குள்மூடி வைத்து,இன்னின்னதைஅடிக்கவேண்டுமென்று கட்டளையிடுகிற சர்வ வல்லமையின் ஒளி, புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளி**

வீடுகளிலும்,நாடுகளிலும் ஏற்றப்பட வேண்டிய ஒளி. பள்ளங்களையெல்லாம் நிரப்புகிற ஒப்பற்ற ஒளி.மலைகளையும் குன்றுகளையும் நொறுக்கி பதராக்குகிற அதிகார ஒளி மின்னலின் ஒளியை தம் கைக்குள் மூடி வைத்து, இன்னின்னதை அடிக்க வேண்டுமென்று கட்டளையிடுகிற சர்வ வல்லமையின்ஒளி, புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளி மனுஷருக்கு ஒளியாக உலகத்திற்கு வந்த ஒளி, சூரிய பிரகாசத்திலும் அதிகமான சுடரொளி.யார் இவர்?**ஒளியை தன் வஸ்திரமாக தரித்து சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற மீட்பர் இயேசு.**

மனிதர்களால் ஏற்றப்படுகிற தீபம் அருகே ஒருவன் சென்றால் அது அவனை பொசுக்கிவிடும். கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிற இந்த வார்த்தையான ஒளிக்கு அருகே ஒருவன் சென்றால் – அது அவனை பொசுக்கி போடாது, மாறாக அந்த தீபமாய் அதே ஒளியாய் அவனை மாற்றுகிறது. கொலோ 1 :12,13 சொல்லுகிறது

**“ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மை தகுதியுள்ளவராக்கினவரும்,**

**இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி,தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்”.**

## உ.நீதிக்குட்படுத்தும் நட்சத்திரம்



**“ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும்,அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்”** (தானி 12 :3).

**நீதிக்குட்படுத்துவது என்றால் என்ன?**

**“அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்கு தடை செய்து நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா ? என்றான்.**

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்ற தாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்.** (மத் 3:13–15).

ஞானஸ்நானம் என்பது ஒரு கற்பனை கட்டளை. மத் 28:19,20 என்ன சொல்லுகிறது? "**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் ஆமென்"**. இது தேவநீதி. மத் 28 : 19,20 யை ஒவ்வொருவரும் கைக்கொண்டு சீஷனாகி மற்றவர்களையும் சீஷராக்க வேண்டும். இதைத்தான் தேவனே இறங்கி வந்து தானே ஒரு அடையாளமாக, சாட்சியாக நிறைவேற்ற (இவருக்கு நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லாதிருந்தும்) யோவான் ஸ்நானகனை வலியுறுத்துகிறார். அப்படியென்றால் இது எவ்வளவு ஒரு முக்கியமான கட்டளை இதுமட்டுமல்ல புதிய உடன்படிக்கையை கொண்டுவந்த இயேசுவின் நீதிகள். அநேகம் சொல்லப் பட்டிருக்கிறது. இதை நாமும் கைக்கொள்ள வேண்டும். பிறரையும் கைக்கொள்ளும்படி செய்வதுதான் நீதிக் குட்படுத்துதல்.

> **புதிய உடன்படிக்கையை கொண்டு வந்த இயேசுவின் நீதிகள். அநேகம் சொல்லப் பட்டிருக்கிறது. இதை நாமும் கைக் கொள்ள வேண்டும். பிறரையும் கைக்கொள் ளும்படி செய்வதுதான் நீதிக்குட்படுத்துதல்.**

இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய பார்வையில் நட்சத்திரங்கள் ஆகாய மண்டல நட்சத்திரங்கள் போல என்றென்றும் பிரகாசிப்பவர்கள். இதைத்தான் முதல் நூற்றாண்டு முதல், இயேசு உயிர்த்தெழுந்து பரத்திற்கு போனபிறகு ஆதி அப்போஸ்தல சபையார் தீவிரமாக செய்து கொண்டிருந்தார்கள். அநேகரை நீதிக்குட்படுத்தி, ரோமராயர்களால் இரத்த சாட்சிகளாய் மரித்துக் கொண்டிருந்தார்கள். "**விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள் , நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங் களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்.**

**அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள். பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியர்களுடைய சேனைகளை முறியடித்தார்கள்.**

**ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள், வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெற சம்மதியாமல், வாதிக்கப்பட டார்கள்; வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்**

**உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்"** (எபி 11 : 33–38). கிறிஸ்மஸ் கொண்டாடிக் கொண்டிருக்கவில்லை, புத்தாடை உடுத்தி குதியாட்டம் போட்டுக் கொண்டிருக்கவில்லை, ***Cake*** வெட்டிக் கொண்டு பாட்டிலை ***Shake*** பண்ணிக் கொண்டிருக்கவில்லை.

மாறாக நீதியை விதைத்துக் கொண்டு நீதிபரராய் மாறினார் கள். மாரநாதா, மாரநாதா என்று அறை கூவலிலே தேசத்தை நீதிக் குட்படுத்திக் கொண்டிருந்தார்கள். மாரநாதா என்றால் **இயேசு வருகி றார்** என்று அர்த்தம்.4-ம் நூற் றாண்டில்தான் அரசன் கான்ஸ் டன்டைன் காலத்தில்தான் கிறிஸ் தவமதம் என்ற ஒரு அரசாங்க மதம், பாபிலோனிய முறைமைப் படியே தோற்றுவிக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு ரோம அரசர்களால் நடத்திக் கொண்டு செல்லப்பட்டது. அன்றிலி ருந்து தோன்றினது தான் இந்த கிறிஸ்மஸ் பண்டிகைகளெல்லாம். டிசம்பர் 25 ல் இயேசு கிறிஸ்த பிறந்தார் என்று எங்கேயும் எழுதப்படவில்லை. குறிப்பிடப் படவுமில்லை. பாபிலோனிய கலாச்சாரம் வழக்கத்தின் படியே சூரிய கடவுள்,தேவதை வணக்கங்கள்,வானராக்கினிகள் என்று பலவகைகள் கிறிஸ்தவ மதத்தை ஜோடித்தன. இதன் வரலாறு பெரியது.இயேசு மனுக் குலத்தின் இரட்சிப்புக்காக பிறந்தார். முப்பத்து மூன்றரை வயதில் மரித்தார். உயிர்த்தெழுந்தார். பரமேறினார். மீண்டும் வருவார்.இதை அடிப்படையாக கொண்டது தான் **ஜீவமார்க்கம்.** மதத்தை தோற்றுவிக்க இயேசு வரவில்லை. மனுக்குலத்தை இரட்சிக்க இயேசு வந்தார். பண்டிகைகளைக் கொண்டாடுங்கள் என்று சொல்லி இயேசு வரவில்லை, தன்னை நேசிப்பதுபோல பிறரையும் நேசி என்ற அன்பின் மார்க்கத்தை கொண்டாடுங்கள் என்று சொல்லி இயேசு வந்தார்.**என்னை பின்பற்றி வரவிரும்புகிற வன் தன்னை வெறுத்து தன் சிலுவையை சுமந்துகொண்டு என் பின்னே வரக்கடவன் என்றார்.** சிலுவையை அணிந்து கிறிஸ்தவ பெயரால் வாழ்வது அல்ல! (வாழ்க்கையில் வரும்) சிலுவையை சுமந்து கிறிஸ்துவை அறிந்து வாழ்வதே, இந்த **கிறிஸ்தவ ஜீவிதம்.** புரிந்து கொள்வோம்.

**மதத்தை தோற்றுவிக்க இயேசு வரவில்லை. மனுக்குலத்தை இரட்சிக்க இயேசு வந்தார். பண்டிகைகளைக் கொண்டாடுங்கள் என்று சொல்லி இயேசுவரவில்லை, தன்னைநேசிப்பதுபோல பிறரையும் நேசி என்ற அன்பின் மார்க்கத்தை கொண்டாடுங்கள் என்று சொல்லி இயேசு வந்தார்.**

இதைத்தான் பேதுரு தன் முதல் பிரசங்கத்தில் (அப்போஸ் தலர் 2ம் அதிகாரம்) ஜீவமார்க் கத்தை எனக்கு தெரியப்படுத்தினீர் என்ற தாவீதின் தீர்க்கதரிசனத்தை கோடிட்டு காட்டுகிறார். கிறிஸ்து வை அறிந்தவனுக்கு (உள்ளான மனுஷன்)எந்நாளும் மகிழ்ச்சி கிறிஸ்துவை அணிந்தவனுக்கு (வெளித்தோற்றம்)கிறிஸ்மஸ்க்கு மட்டும் மகிழ்ச்சி. ஜீவமார்க்கத்தை சரியாக அறிந்து கொள்வோம். இரட்சிப்பின் வஸ்திரம் அணிந்து கொள்வோம். அநேகரை நீதிக்குட்படுத்து வோம். நட்சத்திரங் களைப்போல் பிரகாசிப்போம்.கிறிஸ்து நம்மை நம்பி விட்டுச்சென்ற அவருடைய கனமான ஊழியத்தை நிறைவான, மகிழ்ச்சியோடு செய்வோம்.

## 3.மார்க்கந் தப்பி அலையும் நட்சத்திரம்



**இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து பயமின்றி கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறார்கள் இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீ ரற்ற மேகங்களும் , இலையுதிர்ந்து கனி**

**யற்று இரண்டு தரஞ்செத்து வேரற்றுப் போன மரங்களும்,**

**தங்கள் அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங் களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டி ருக்கிறது.**(யூதா 12,13).

இவர்களைக் குறித்து சொல்லும்போது கூடவே இருப்பார்கள்.சபைக்குள் இருப்பார் கள். சபைக்கு தூண்களாகவும் இருப்பார் கள். அன்பின் விருந்துகளில் பயமின்றி விருந்துண்டு கூடவே நடப்பார்கள்.இதன் அர்த்தம் என்ன?வெளிப்பார்வைக்கு ஆட்டின் தோல்.உள்ளேயோ பட்சிக்கிற ஓநாய்களாய் இருப்பார்கள்.சபையின் ஆசீர்வாதத்தை சபையின் வளர்ச்சியைக் கண்டு இவர்கள் அறியாமையிலே இவர்களுக்குள் எரிச்சலும் பொறாமையுமடைவார்கள். தூணும், ஊணுமாயிருந்து கொண்டே(**Out Look**) சபை யும் சபை போதகரும் நிமிர்ந்து நடவாதபடி கூனாக, கூனர்களாக நடக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டிருப்பார்கள்.இதைத்தான் கறைகளாயிருப்பார்கள் என்று யூதா குறிப் பிடுகிறார்.இது ஒரு ஆவி.இப்படிப்பட்ட ஆவி கள் சபைக்குள் காணப்படும். வெளிப் பார்வையிலே நாங்களும் சபைதான், ஆலயம்தான் என்று பீத்தி நடப்பார்கள்.இது ஒரு வகை மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரம்.

அடுத்ததாக இவர்கள் தங்களை தாங்களே மேய்த்துக் கொள்வார்கள். அழைப்பின் மேன்மை தெரியாத அலங் கோலங்கள். நீங்கள்தான் ஊழியம் செய்வீர்களா நாங்களும் ஊழியம் செய்வோம்.நீங்கள்தான் பெரிய பரிசுத்தவான்களா நாங்களும் பரிசுத்தவான்கள்தான் என்று சபைக்குள் இருந்து கொண்டே மற்ற ஊழியங்களோடும் , ஊழியர்களோடும் அடிக்கடியாக வேற்று சிந்தையோடு கைகோர்த்து நடப்பார்கள். இவர்கள் எந்த சபையில் இருக்கிறார்கள் என்று சொந்த ஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் குழப் பத்தை கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள் இப்படியும் சில ஆவிகள்.

மேய்ப்பனுக்கு ஒரு அழைப்பு அபிஷேகம் உண்டு. அதன் மேன்மை இவர்களுக்குத் தெரியாது புரியாது. தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்வார் கள் (மேய்ப்பன் என்ற நினைப்பில்) உள்ளுக் குள்ளே பெருமையின் ஆவி மேய்ந்து கொண்டிருக்கும்.இது எத்தனை பெரிய ஆபத்து என்று அப்பொழுது அவர்கள் அறியாமல் கர்த்தரோடு சேட்டை பண்ணிக் கொண்டிருப்பார்கள்.ஒருநாளில் கர்த்தர் இவர்களுடைய சட்டையை கழற்றிவிடுவார் என்று அறியாமல், வெளிப்படுத்தின விசேஷத் தில் சொல்லப்பட்டபடி, **நீ நிர்பாக்கியமுள்ள வனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திர னும்,குருடனும்,நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல்,நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லு கிறபடி யால்;**

**நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப் பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சனம் தோன்றாத படிக்கு நீ உடுத்திக் கொள்வ தற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள் ளவும்,நீ பார்வையடையும் படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டு மென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்** (வெளி3:17,18). ஆம், தங்கள் பார்வையிலே குறை வுள்ளவர்கள் என்பதை அறியா மல் எண்ண வேண்டிய தற்

**அடிப்படை சத்தியம்கூட இல்லாத வேரற்றுப்போன மரங்கள்.எப்படி கனி கொடுக்க முடியும்!வேரோடு இருந்து அடர்ந்த இலைகளுடைய அத்திமரமே கனி கொடுக்கவில்லையே!**

கும்,மிஞ்சி தங்களைக் குறித்து எண்ணிக் கொள்வார்கள். இது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

யூதா சொல்லுகிறார் அடிப்படை சத்தியம்கூட இல்லாத வேரற்றுப்போன மரங்கள்.எப்படி கனி கொடுக்க முடியும்! வேரோடு இருந்து அடர்ந்த இலைகளுடைய அத்திமரமே கனி கொடுக்கவில்லையே! (ஆவிக்குரிய சபைகளிலே)அப்போஸ்தல உபதேசம் என்ற அடிப்படை சத்தியமே இல்லாத பாரம்பரிய சபைகளில் கர்த்தராகிய இயேசு எந்த கனிகளை எதிர்பார்க்க முடியும்!

இதைத்தான் மத்தேயு *15 : 8,9* வசனங்கள் **இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள் ; அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகியிருக்கிறது**

**மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்** என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் சத்திய உபதேசம்,இயேசுவின் ஜீவனுள்ள வார்த்தைகள் எங்கே போயிற்று? மனுஷனுடைய கற்கனைகளும், கட்டளைகளும் அதிலிருந்து வெளிப் படுகிற வழிபாடுகளும் வீண்தானே! நம்மை பரலோகம் கொண்டு செல்லாதே! எல்லாமே ஒரு நாடகத் தோற்றமல்லவா! எத்தனை பரிதாபம்! ஒரு பெருங்கூட்ட ஜனங்களின் ஆத்துமா நஷ்டமடைகிறதே! எத்தனை பயங்கரம்!!!

**என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளை கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார் .**

**நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.**

**என்னில் நிலைத்திருங்கள்,நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள்.**

**நானே திராட்சச்செடி,நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத் திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது.**


**ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்** (யோவான் *15: 2– 6*).

யூதா சொல்லும்போது இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப் பட்டிருக்கிறது.யார் இவர்கள் ?மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்கள்.

கவனியுங்கள்,இப்பொழுதும் ஒன்றும் குறைந்துபோய்விடவில்லை. இன்றே இரட்சண்யத்தின் நாள். இன்றேஅநுக்கிரகத்தின் காலம். அவருடைய காருண்யத்திற்குள் ஓடி வந்துவிடுங்கள். ஜீவ மார்க்கத்தை பற்றிக்கொள்ளுங்கள். வார்த்தையிலே நிலைத்திருங்கள். நித்தியஜீவனை உங்களுக்குத் தருவார்.நித்திய காலமும் நம்மோடிருப்பார்.

**கவனியுங்கள்,**
**இப்பொழுதும் ஒன்றும் குறைந்துபோய்விடவில்லை. இன்றே இரட்சண்யத்தின் நாள்.இன்றே அநுக்கிரகத்தின் காலம். அவருடைய காருண்யத்திற்குள் ஓடி வந்து விடுங்கள். ஜீவ மார்க்கத்தை பற்றிக் கொள்ளுங்கள்.**

# 4. விழுந்து போன நட்சத்திரம்




**"அவரைக் காண்பேன்,இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன்,சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும். ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும் " (எண் 24 :17) .**

மெசொப்பொத்தோமியாவின் ஊராகிய பெத்தோரிலிருந்து பேயோரின் மகன்தான் இந்த உன்னதமான தீர்க்கதரிசியான இந்த பிலேயாம் (உபா 23 :4). ஏன் இவன் உன்னதமான தீர்க்கதரிசி? உன்னதமானவரின் (இயேசு) பிறப்பை குறித்து சொன்ன வருடம் கிறிஸ்து பிறப்பதற்கு1450 வருடங்களுக்கு முன்பாக. இத்தனை கனத்திற்குரிய தீர்க்கதரிசி இறுதியில் வீழ்ந்து போனான். இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்தில் யோர்தான் பள்ளத்தாக்கில் பாளையமிறங்கினபோது மோவாபிய ராஜா **பாலாக்** இவனை இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படியாக அழைப்பித்தான். பிலேயாமின் உள் மனது பாலாக்கின் வெகுமதிகள் மேலேயே நோக்கமாயிருந்தது.ஆனாலும் தேவன் அவன் அவர்களை சபிக்கிறதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கும்படி செய்தார். அப்படியிருந்தும் மோவாபிய ஸ்திரீகள் இஸ்ரவேலரோடு வேசித்தனம் பண்ணும்படி ஆலோசனை சொல்லிப் போனான். அதுவுமில்லாமல் இஸ்ரவேலர் மோவாபியருடைய தேவர்களையும் பற்றிக் கொண்டார்கள். பிற்பாடு மீதியானியரோடு இஸ்ரவேல் யுத்தம் செய்கையில் பிலேயாமும் மீதியானியருக்கு உதவியாயிருந்தான். மீதியானியானியர் தோற்கடிக்கப்பட்ட போது இந்த பிலேயாமும் கொல்லப்பட்டான் (எண் 31 :8).

கவனியுங்கள்,மனுக்குலத்தின் இருள் நீக்கும் நட்சத்திரமாக பிறக்கப்போகும் மேசியாவை குறித்தும் அவருடைய ஆளுகையை குறித்தும் தீர்க்கமாக முதன் முதலாக உரைத்தவன் அற்பமான வெகுமதிகள் மேல் தன் இருதயத்தை செலுத்தினதால் எப்படியாக வீழ்ந்து போனான் என்பதற்கு இந்த பிலேயாம் ஒரு திருஷ்டாந்த பாத்திரம்.

இந்த கிறிஸ்மஸ் நாட்களிலே நாம் இந்த பிலேயாமை நினைத்துப் பார்ப்போம். உயர்ந்த வெளிப்பாட்டை பெற்ற ஒரு தீர்க்க தரிசி தேவனால் உன்னதமான இடத்திற்கு செல்ல வேண்டியவன். நடந்தது என்ன? 2பேதுரு 2 :15 சொல்லுகிறது செம்மையான வழியைவிட்டுத் தப்பி நடந்து பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி;

தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது.

**உன்னதமானவரின் (இயேசு) பிறப்பை குறித்து சொன்ன வருடம் கிறிஸ்து பிறப்பதற்கு1450 வருடத்திற்கு முன்பாக. இத்தனை கனத்திற்குரிய தீர்க்கதரிசி இறுதியில் வீழ்ந்து போனான்.**

அநீதத்தின் கூலியை விரும்பிகிறவனாய் மாறிப் போனான்.கிரமமானவழியை விட்டு

விலகி அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டவனாய் ஆனான். சுடர் விட்டு பிரகாசிக்க வேண்டிய நட்சத்திரம் விழுந்து போனது '**ஆசை**' என்ற வஞ்சக வலையிலே பிசாசு இழுத்துப் போட்டு விட்டான்.



அருமையானவர்களே,இந்த கிறிஸ்மஸ்நாட்களிலே நாம் ஒன்றை நினைவு கூறுவோம். விடுதலைக்காக இறங்கி வந்த இரட்சகர். அதாவது, **அவர் தேவனுடையரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாய் இருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்** (பிலிப் 2: 6,7).நம்மை இரட்சிக்கும்படி இரட்சகராய் பிறந்த இவரின் வெறுமையை நம்முடைய உடைமையாய் ஆக்கிக் கொள்வோம். தேவையற்ற ஆசையை உதறித் தள்ளிவிட்டு, **போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்** (1தீமோ 6 : 6) என்ற சிந்தையோடு இந்த கிறிஸ்மஸ் நாட்களிலே ஒரு நல்ல தீர்மானம் எடுத்தவர்களாய் முன் செல்வோம்.

இந்த கிறிஸ்மஸ் ***Season***யிலே அநேகர் உணர்வடைவார்களாக! விழுந்து போவதற்கு முன் ஒரு அறைகூவல். ஏனெனில் எபிரெயர் 6 :5,6 சொல்கிறது, **ஏனெனில் ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியை பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனி வரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.**

**சுடர் விட்டு பிரகாசிக்க வேண்டிய நட்சத்திரம் விழுந்து போனது 'ஆசை' என்ற வஞ்சக வலையிலே பிசாசு இழுத்துப் போட்டு விட்டான்.**

அவரே நமக்கு மாதிரி.இருளை நீக்கும் ஒளியாய் இப்பூமிக்கு வந்த அவரின் அடிச்சுவடுகளை பின்பற்றுவோம். நட்சத்திரங்களாய் பிரகாசிப்போம்.

பேதுரு எழுதும்போது **இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள், ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்** (1பேதுரு 2 :21). நம்முடைய அழைப்பு என்னவாம்? தொடர்ந்து வரும்படி வலது புறமும் இடது புறமும் நம் மாம்சசிந்தைக்கு இடம் கொடுத்து கொஞ்சமும் சாயாமல்..ஒரே நேர்கோட்டிலே அந்த அடிச்சுவடுகளின் மேல் நம் கால்களை பதித்து முன்னேறும்போது உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்.

இயேசுவின் பிறப்பின் இடத்தை ஞானிகளுக்கு காண்பித்த நட்சத்திரத்தைப் போல இந்த உலகத்திற்கு அவருடைய பிறப்பின் அர்த்தத்தை,பூமிக்கு இறங்கி வந்ததன் நோக்கத்தை,அறிவிக்கும் நட்சத்திரங்களாக நம்மை,கரங்களில் எடுக்க தேவன் விரும்புகிறார். அங்கே கிறிஸ்மஸ் என்ற பதத்தின் உண்மையான அர்த்தம் உள்ளடங்கியிருக்கிறது.அல்லேலூயா...அல்லேலூயா...!

# சிந்தனைக்கு

- அன்பும் மரியாதையும் கேட்டுப் பெறுவது அல்ல,
  கொடுத்து பெறப்பட வேண்டியவைகள்.
- கண்ணிற்கு எட்டும் தூரம் வரை எதிரி புலப்படவில்லையென்றால்
  அருகில் இருப்பவர்களைத்தான் ஆராய வேண்டும்.
- வாழ்க்கையின் சிறந்த நாட்களை அடைய
  சில மோசமான நாட்களோடு போராடியே ஆக வேண்டும்.
- ஏமாற்றம் புதிதல்ல ஏமாறும் விதம்தான் நாளுக்கு நாள் புதிது
  சில நேரம் அன்பால், சிலநேரம் பிறரை நம்புவதால்.
- உண்மை, நேர்மை என்பவைகளெல்லாம் அழியாத சொத்து
  காலம் செல்ல செல்லத்தான் அதன் மகத்துவம் தெரியும்.
- சிலருக்கு நாம் மகிழ்ச்சியாக இல்லைன்னு தெரியக்கூடாது
  சிலருக்கு நாம் மகிழ்ச்சியாக இருக்கோம்னு தெரியக் கூடாது.

## திரு குரல்

1.பொருள் இறுகப் பற்றி ஈயாதான் வாழ்வு - அவ்வாழ்வு
நிலத்திற்கு பாரமே .

2.கொடுப்பதும் துய்ப்பதும் இல்லார்க்கு அடுக்கிய
கோடி இருப்பினும் எந்தப் பயனும் இல்.

3.யார்க்கும் பிரயோஜனமற்ற ஒருவனின் செல்வம்- ஊர் நடுவில்
நச்சு மரம் பழுத்தாற் போன்றது .

4.அன்பில்லாது அறம் நோக்காது வருத்தி ஈன்ற செல்வம்
பெற்று நுகர்பவர் மற்றவரே.

## வானவெடி

**ச**மீப காலங்களில் அநேக ராஜபாட் நாடக கலைஞர்களை கிறிஸ்தவ வட்டாரங்களில் காணமுடிகிறது.தேர்தல் களமும் அதனால் ஒவ்வொரு ராஜபாட்டு களும் தேறுகிற விதமான களமுமாய் அமைந்து வருகிறது. ராஜபாட் என்று சொல்வது பிஷப்மார்களின் எண்ணிக் கையும் அவர்களிலே அலங்கரிக்கப் படுகிற ஆடை அலங்காரமுமே ! இரட்சகர் இயேசு பூமிக்கு கொண்டு வந்த கிறிஸ்தவம் எங்கே போனது என்று தேடிப்பார்க்க வேண்டிய ஒரு அவல நிலை.அரசியல் தலைவர்களெல்லாம் ஆண்டவன்மார்களாய் நொடிப்பொழு தில் மாறிவிடுகிறார்கள்!! மகா வேதனை! ஒன்று நிச்சயம். கர்த்தரு டைய கண்கள் பூமியெங்கும் சுற்றி உலாவிக் கொண்டிருக்கிறது...!!!

# துதித்தலே ஏற்றதும் இன்பமுமாயிருக்கிறது

**சகோதரிகள் பகுதி**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


அருமையானவர்களே, இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் வந்திருக்கிறோம்.இந்த மாதத்தின் தொடக்க மாதம் முதல் தேவன் நம்மை நடத்தி வந்த எல்லா வழிகளையும் நினைத்து அவரை நன்றியோடு ஸ்தோத்தரிப்போம்.இந்த மாதம் முழுவதும் தேவனை துதிக்கிற மாதமாக கர்த்தர் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து அவருக்கு நன்றி செலுத்துகிற மாதமாக நம் முன் நிறுத்துவோம்.எபிரெயர் 13 :15ல் அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம். எப்போதும் என்பது எல்லா நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் அவரை துதிப்பது ஆகும்.

காலையிலும்,மாலையிலும் பகல் வேளையிலும்,இரவு வேளைகளிலும்,படுக்கும் போதும்,நடக்கும் போதும், உட்காரும்போதும்,உண்ணும் போதும்,உறங்கும் போதும்,பேசும்போதும், பேசாமலிருக்கும் போதும், எல்லா வேளைகளிலும் கர்த்தரை துதிப்பது நலம் . இது சாத்தியமா என்றால் தாவீது தன் வாழ்க்கை முழுவதிலும் இப்படியே தேவனை துதித்து நடந்தபடியினால்தான் கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் (சங் 34: 1) என்று சொல்லுகிறார்.

தாவீது எப்பொழுதும் துதிக்கிற மனுஷனாக இருந்தபடியினால்தான் சங்கீதம் முபவதிலும் துதித்தலின் மேன்னைமயை மகிமையை எழுதுகிறார்.துதித்தலே இன்பமும் ஏற்றதுமா யிருக்கிறதுஎன்கிறார் (சங் 147 :1).சங் 148,149,150 முழுவதுமே கர்த்தர் சிருஷ்டித்த சிருஷ்டிப்புக்களெல்லாம் துதிக்கும்படி கட்டளையிடுகிற சங்கீதமாகவே இருக்கிறது.

அருமையானவர்களே,நம்முடைய சூழ்நிலைகள் நன்றாயிருக்கும் போது..அல்லது நம்மை சுற்றியிருக்கிறவர்கள் நம்மை விரும்பி,அன்பு பாராட்டி கனம் பண்ணும்போது, கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது என்று மகிழ்ச்சியோடு துதிப்பது எளிது. அதே வேளையில் சூழ்நிலைகள் கடினமாகும்போது,சூழ்நிலைகள் மாறும்போது..திரும்பும் இடமெல்லாம் மனுஷரால் காயப்படும்போது,நம்மோடு நெருங்கி நிற்கிற உறவுகளால் ...நண்பர்களால்...ஏமாற்றப்படும்போது ....செய்த நன்மைக்கு பதிலாக...தீமையை பெற்றுக்கொள்ளும்போது...நல்லவர்கள் என்று நம்பின மனுஷர்களால் தூஷிக்கப்படும்போது...கர்த்தரை துதிப்பது என்பது மிகவும் கடினமாகவே இருக்கும்.ஆனால் வேதத்தில் நாம் வாசிக்கிற ஒவ்வொரு பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையிலும் அநேக விதமான பாடுகளோடும் துக்கத்தோடும்...வேதனைகளோடும்..பலவிதமான போராட்டங்களோடும் கடந்து சென்றுதான் கர்த்தரால் சாட்சி பெற்றதை நாம் பார்க்க முடிகிறது.

தாவீது வாழ்க்கை முபவதும் போராட்டமே.தன் தகப்பன் குடும்பத்திலும் இளையவனாய் பிறந்த தாவீது மற்ற சகோதரர்களால் அற்பமாய் எண்ணப்பட்டு... தள்ளப்பட்டு..ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தான்.அப்படி கடைசியாய் தள்ளப்பட்டிருந்த தாவீதை கண்டுபிடித்தேன் என்று கர்த்தர் சொன்னார்.இப்படி கர்த்தரால் கண்டுபிடிக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதின் வாழ்க்கையில்தான் பயங்கரமான போராட்டங்கள் காத்திருந்தது.தன் சொந்த மாமனாரால் தொடர்ந்து விரட்டப்பட்டான் மரணத்தின் விளிளம்பு வரை ஓடினான்.ஆனாலும்சவுலை



கொல்லும்படியான சந்தர்ப்பங்கள் வந்தும் கூட அவன் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட மனுஷன் மேல் நான் கை போட மாட்டேன் என்று தேவனுக்கு பயந்திருந்தான்.தன் சொந்த மகன் அப்சலோமால் விரட்டப்பட்டு காடுகளில் அலைந்து திரிந்தான். 1 சாமு 30 : 4ல் வாசிக்கும் போது ...தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்.தன் சொந்த ஜனங்களாலும் மிகவும் நெருக்கப்பட்டான்.சகல ஜனங்களும் அழுகிறதற்கு தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள் என்றும்...தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்.....சகல ஜனங்களும்.......அவனைக் கல்லெறிய வேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்.**தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்.** என்று வாசிக்கிறோம். ஆம், அருமையானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும் எல்லா சூழ்நிலைகளிலும் நாம் கர்த்தரை துதிக்கிறவர்களாக இருப்போம்.

அடுத்து எபேசியர் 5 :20 ல் **நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து....**என்று வாசிக்கிறோம். போபுவின் வாழ்க்கையை பார்க்கும்போது,உத்தமனும், சன்மார்க்கனும்,தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தார். ஆனாலும் யோபுவின் வாழ்க்கையில் வந்த பயங்கரமான சோதனைகளில் போராட்டங்களிலும் தன்னுடைய **எல்லாவற்றையும்** இழந்து போன நிலையிலும் கர்த்தர் கொடுத்தார் ..கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றார் ( யோபு 1 : 21).இவையெல்லாவற்றிலும் **யோபு பாவஞ் செய்யவுமில்லை தேவனைப் பற்றி குறை சொல்லவுமில்லை.**தொடர்ந்து, நான் போகும் வழியை கர்த்தர் அறிவார் அவர் என்னை சோதித்த பின் பொன்னாக விளங்குவேன் என்கிறார்.மேலும் அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்கிறார்.இப்படியாக யோபு தன் வாழ்க்கையின் எல்லாவற்றிற் காகவும்,எல்லாவற்றிலேயும் கர்த்தரை ஸ்தோத்தரித்தப்படியினால் தான் இழந்துபோன **எல்லாவற்றையும்** இரட்டந்தனையாய் திரும்ப பெற்றுக்கொண்டார் என்று பாத்க்கிறோம்.


1தெச 5 : 19ல்**எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது**.என்று வாசிக்கிறோம்.ஆம், அருமையானவர்களே,வேதத்தில் அன்னாளைக் குறித்து பார்ப்போமானால் அவள் மனக்கிலேசமுள்ள ஸ்திரீயாக இருந்தாள்.அவளுக்கு பிள்ளை இல்லை; கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியால்,அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளைமிகவும் விசனப்படுத்துவாள் என்று பார்க்கிறோம் (1சாமு 1: 6).அன்னாளைப்போல நம்மிலும் அநேகர் எனக்கு பிள்ளை இல்லை...என் பிள்ளைகள் என்னைவிட்டு பிரிந்து போய்விட்டார்கள்..எனக்கு வருமானம் இல்லை..என் சரீரத்தில் ஆரோக்கியம் இல்லை...என் கணவர் என்னோடு இல்லை...என் மனைவி என்னோடு இல்லை...என் உறவுகள் என்னை கைவிட்டார்கள்...எனக்கு சமாதானம் இல்லை....என்று இப்படிப்பட்ட அநேக இல்லை...இல்லை என்ற குறைவுகளோடு அங்கலாய்த்துக் கொண்டிருக்கலாம்...புலம்பிக்கொண்டிருக்கலாம்...கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கலாம்..இங்கே அன்னாள் என்ன செய்தாள்?தன் கஷ்டங்களை...தன் மனதின் பாரங்களை அண்டை அயலாரிடம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை...தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லி ஆறுதலுக்காக அலையவில்லை...1சாமு சொல்லுகிறது **அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் வந்து தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள்**(1 சாமு 1: 15 ) என்று பார்க்கிறோம்.

அருமையானவர்களே,இந்த வருடத்தின் கடைசி நாட்களில் வந்திருக்கிற நாமும் தேவசமூகத்தில் சில தீர்மானங்களை எடுத்துக்கொள்வோம்.வேதம் சொல்கிறபடி நாமும் இப்படிப்பட்ட ஸ்தோத்திரத்தோடும் துதியோடும் புதிய வருடத்திற்குள் பிரவேசிக்க நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம் .சபை எடுத்துக்கொள்ளப்படப் போகிற கடைசி நாட்களுக்குள் நாம் இருக்கிறபடியால் நம் ஆவி,ஆத்துமா சரீரத்திலே பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு விழிப்புணர்வோடு ஆயத்தமாவோம்.

**கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆயத்தப்படுத்துவாராக.**

சகோதரி : **லீமா போஸ்கோ**

# கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



கிறிஸ்தவனே
டிசம்பர் விடிந்ததுமே
கிறிஸ்மஸ் பூரிப்பு

மனசுக்குள்ளே
மகிழ்ச்சி மத்தாப்பு
பம்பரமாய் சுழல்கிறது!

சுவரில் தொங்கும்
காலண்டர் காலாவதியாகிறது
சுவர்கள் கலர்வதியாகிறது
ஆலயங்கள் அழகுவதியாகிறது



ஒற்றை நாள்
கொண்டாட்டத்திற்காக
ஒப்பற்ற ஒப்பனைகள்
கணக்கற்ற கற்பனைகள்

கண்சிமிட்டும்
காகித நட்சத்திரங்கள்
குடிலுக்குள்
குட்டி குட்டி பொம்மைகள்
கலர் கலராய்
கிறிஸ்மஸ் மரங்கள்
அத்தனையும்
கனியில்லா காகிதங்கள்

கிறிஸ்தவனே
கிறிஸ்து பிறப்பின்
நதிமூலம் தெரியுமா உனக்கு?

பெத்லகேம் நகரத்தின்
புகழ்மிகு வீதிகளில்
வழக்கம்போல் ஆரவாரம்
விறுவிறுப்பாய் வியாபாரம்

யூதேயா தேசத்தில்
முடியாட்சி மன்னன்
முடிவு செய்தபடி
குடிமதிப்பு எழுதுவதற்கான
குடிமக்கள் எல்லாம்
குடிபெயர்ந்த நேரம்...
யோசேப்பின் குடும்பம்
யோசனையோடு புறப்பட்டது

காரணம்
கன்னிமரியாளுக்கு அது
பிரசவ நேரம்
பிரயாணமோ வெகு தூரம்

காலங்களில் அது..
கார் பனி பொழியும் காலம்
கடுங்குளிரில் பறவைகள் கூட
கொடுந்துயரில் அவதிப்பட்டன

பிரசவ வலி பின்னியெடுக்க
சத்திரத்தின் முன்னணையில்
கறையில்லா கன்னி மடியில்
குறையில்லா கிறிஸ்மஸ்

சத்திரத்தில்
இடம் மறுக்கப்பட்டவர்
சரித்திரத்தில் இடம் பிடித்தார்


அவரை
காண வந்த ஞானிகளை
கிழக்கே உதித்த
வெள்ளி நட்சத்திரம்
மெல்ல அழைத்துச் சென்றது

இரட்சகர் இயேசுவை
தேடி வந்த ஞானிகள்
கூடி நின்று தொழுதனர்
பாடி நின்று ஆராதித்தனர்

ஆனால் இன்று
அர்த்தமில்லா கும்மாளங்கள்
அளவில்லா கொண்டாட்டங்கள்
கிறிஸ்மஸ் அன்றுதான்
அதிக அளவில்
மதுபானம் விற்பனையாகிறது

பண்டம் பலகாரம் செய்து
அண்டை வீட்டுக்கு அனுப்பி
பண்டமாற்று செய்து
வாழ்த்துக்கள் பரிமாறுவதா
கிறிஸ்மஸ்..?

கிறிஸ்தவனே..
பவுல் சொன்னது போல்..
கிறிஸ்து
புற ஜாதிகளுக்குள்
உருவாகுமளவும்
கர்ப்ப வேதனைப்படு.
அதுவே
கிறிஸ்மஸ் கொண்டாட்டம் .



அல்பா என். ஆசைத்தம்பி
(ஆவடி 9841166883 ).

# வேத வினா போட்டி



## கவனியுங்கள்

கடந்த டிசம்பர் மாதம் 31 பேர் எழுதியதில் 31 பேரும் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள்.நல்லது. தொடர்ந்து பிறருக்கும் அறிமுகப்படுத்தி பயனடையச் செய்யுங்கள். வேதத்தை கருத்தூன்றி படியுங்கள். பதில் எழுதும் போது அதிகாரம், வசனம் மட்டும் குறிப்பிடுவது ஏற்றுக் கொள்ள முடியாது.

## வேத பகுதி

### உபாகமம் -15 முதல் 19 வரையுள்ள அதிகாரங்கள்

1.இஸ்ரவேல் ஜனம் எகிப்திலிருந்து புறப்படப் பண்ணின நேரம் எது ?

2.கர்த்தர் கொடுத்த தேசத்திலே எத்தனை பட்டணங்கள் பிரித்து வைக்கப்பட வேண்டும் ?

3.இஸ்ரவேலருக்குள் யார் ராஜாவாக ஏற்படுத்தப்பட வேண்டும்?

4.'மனப்பூர்வமான காணிக்கை' - இந்த ஐந்து அதிகாரங்களில் எத்தனை முறை வருகிறது ?

5.நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய் உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை -அதிகாரம் வசனம் குறிப்பிடுக.

6.கர்த்தருக்கு அருவருப்பான பலி எது?

7.சுதந்திரம் சகோதரருக்குள்ளே உண்டா? இல்லையா?அப்படியென்றால் யாருடையது ?

8.நியாயப்பிரமாணம் சொல்லுகிறது ஜீவனுக்கு ஜீவன்-கண்ணுக்கு-------- மீதியை நிரப்புக.

9.பண்டிகையில் சந்தோஷப் பட வேண்டியவர்கள் யார் யார்?

10.பரிதானம் என்ன விளைவிக்கும்?

பரிசு பெற்றவர் : **ஆலீஸ் அருள்மணி** ( கோட்டையூர்).

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 28 - 12 - 2023.**

## கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1. எட்வினா (கோயில் பதாகை).
2.சரஸ்வதி தேவராஜ் (எக்மோர்).
3.கீதா தினேஷ் (பொத்தூர்).
4.மஹா (திருவள்ளுர்).
5.ஹெப்சி கிரி (காமராஜ் நகர்).
6.லீலா ஜெயபால்(காமராஜ்நகர்).
7.செல்வம் ஜெயராஜ் (பிலாய்).
8.செல்வராஜ் சாலொமோன் (வள்ளியூர்).
9. Dr. இவான்ஜலின் ஜோன்ஸ் (சேலம்).
10.ஜாய் ஜோஷ்வா (சேலம்).
11.விக்னேஷ்(மோரைஅண்ணாநகர்).
12. அனிதா (வெள்ளச்சேரி).
13.கீர்த்தனா (வெள்ளச்சேரி).
14.மாலதி (வெள்ளச்சேரி).
15.சீயோன்ராஜகுமாரி(வெள்ளானூர்).
16.ரீனா (வெள்ளானூர்).
17.லின்சி தேவபிரியா (வெள்ளானூர்).
18.பிரியா (வெள்ளானூர்).
19.டாரீஸ் பிலோமினா (செங்குன்றம்).
20.மர்வின்இளவரசி(வெள்ளானூர்).
21.ஜென்சி பூஜா (வெள்ளானூர்).
22.ரீட்டா மேரி (பெரம்பூர்).
23.ஜெஸி (வெள்ளானூர்).
24.மதுமிதா (வெள்ளானூர்).
25.பிரீத்தி (வெள்ளானூர்).
26.ஜெப பிரிஸில்லா (வெள்ளானூர்).
27.ஆலிஸ்அருள்மணி(கோட்டையூர்).
28.ஜெய ஜோதி(திருமுல்லைவாயல்).
29.சத்தியவாணிமுரளி(அம்பத்தூர்).
30.ரெஜினாபாண்டியன்(அம்பத்தூர்).
31.பூஜா ரூபநாதன்(வெள்ளானூர்).

✸ ✸ ✸